# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW20

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குணசேகரன் | Caste | : | |
| S/o. | : | சுப்ரமணி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 15.09.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A1 present. A2 and A3 absent, petition u/s.317 Cr.PC filed and allowed.

முதல் விசாரணை;

நான் சங்ககிரி வைகுந்தம் கிராமம் காந்தி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் ரோடு போடும் கான்ட்ராக்டரிடம் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியாது. எதிரிகள் சிவபிரகாஷ், அருண் என்கிற அருண்குமார் ஆகியோரையும் எனக்குத் தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.10 ஆகும். அந்த கையெழுத்தை

எதற்காக போட்டேன் என்று தெரியாது. போலிசார் கேட்டார்கள், நான் கையெழுத்து செய்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அந்த விசாரணையின்போது எங்கள் ஊருக்கு பக்கத்தில் உள்ள காளிப்பட்டி பிரிவில் சின்னசாமி என்பவர் குடியிருந்து டிவி ரிப்பேர் மற்றும் பேப்பர் ஏஜண்டாக வேலை செய்து வந்ததாகவும், அவருடைய மூத்த மகன் சந்திரசேகர் அவரிடம் நிலத்தை விற்று பணம் கேட்டு அடிக்கடி தகராறு செய்து வந்ததாகவும், பிறகு அவர் வீட்டிற்கு வராமல் இருந்து கடந்த 18.05.2018ம் தேதி மாலை 3.00 மணிக்கு சந்திரசேகர் 2 நபர்களுடன் வந்து வீட்டிலிருந்த சின்னசாமியின் கழுத்தை நெறித்து கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டு 19.05.2018ம் தேதி மதியம் 2.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றபோது சங்ககிரி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை மின் விளக்கு வெளிச்சத்தில் பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்ததாகவும் அதில் நானும் எனது நண்பர் மணி மகன் மகேந்திரன் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்ததாகவும் வாக்குமூலம் அளித்விட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.